**வடந்தை – 2024க்கான ஆக்கங்கள் கோரல்**

எமது திணைக்களத்தினால் வருடா வருடம் வெளியிடப்படும் வடமாகாண பண்பாட்டம்சங்களை உள்ளடக்கிய ‘வடந்தை’ நூலுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. இந்நூலில் உள்ளடக்கப்படுவதற்கான தரமான ஆக்கங்கள் எழுத்தாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. பின்வரும் விதிமுறைகளைப் பின்பற்றி கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கமைவான ஆக்கங்களை 31.05.2024க்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியவகையில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**விதிமுறைகள்**

01. ஆக்கங்கள் அனைத்தும் வடக்கு மாகாணம் சார்ந்ததாக இருத்தல் வேண்;டும்.
02. அரசியல் கலப்பற்றதாக இருத்தல் அவசியம்.
03. தனிப்பட்ட நபரை பாதிக்காது கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.
05. ஆக்கமானது அவரவர் சொந்த ஆக்கமாக இருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.
06. முன்னர் எந்த பத்திரிகைகளிலோ, சஞ்சிகைகளிலோ பிரசுரிக்கப்படாத ஆக்கங்களாக இருத்தல் வேண்டும்.
07. கணனியில் தட்டச்சு செய்யப்பட்ட (Font Size – 12) மென்பிரதிகளை(Soft Copy) கீழே தரப்படும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைப்பதுடன் அதன் வன்பிரதியினை (Hard Copy) அலுவலக முகவரிக்கு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ சமர்ப்பிக்கவும்.
08. A4 தாளில் 4-6 பக்கங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
09. கையெழுத்துப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
10. முடிவுத்திகதிக்கு பின்னர் கிடைக்கும் ஆக்கங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைப்புக்கள்**

“ஈழத்து நாட்டார் வழக்காற்றியல்” எனும் பிரதான தலைப்பின் கீழ்

01. பிரதேச ரீதியான உணவுப் பழக்கவழக்கங்கள்

02. பாரம்பரிய விளையாட்டுக்கள்

03. கிராமிய வழிபாட்டு முறைகள்

04. பாரம்பரிய சடங்குமுறைகள்

அனுப்ப வேண்டிய முகவரி:

பிரதிப்பணிப்பாளர்,

பண்பாட்டலுவல்கள் அலகு,

கல்வி அமைச்சு,

செம்மணி வீதி, நல்லூர்

தொலைபேசி இல: 0212054105

மின்னஞ்சல்: npc.culture@yahoo.com

லா.நிருபராஷ்,

பிரதிப் பணிப்பாளர்,

பண்பாட்டலுவல்கள் அலகு.

கல்வி அமைச்சு.